# புதிய காலைக்கதிர்

காலை 01 | தை - 2015 | கதிர் 05





காலையடி மறுமலர்ச்சி மன்ற மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும்


கல்வி ~ கலை ~ இலக்கிய

இதழ்











R.Nilashan


நிரோஜன்

காலையடி மறுமலர்ச்சி மன்ற மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும்

# புதிய காலைக்கதிர்

காலை 01 தை 2015 கதிர் 05

ஆசிரியர் : செல்வி நே. சிந்துஜா

படைப்பாளிகள் :
செல்வி ஈ. யஸ்வினி
செல்வி நே. சாருமதி
செல்வி சு. நிதர்சிகா
செல்வன் ந. யதுசன
செல்வி ஆ. கஜாந்தினி
செல்வி மு. சினோசி
செல்வி சி. விதுர்ஷா
செல்வி ஆ. கஜானி
செல்வன் கு. தர்சன்
செல்வி சி. தர்சனா
செல்வன் யா. சேயவன
செல்வி வ. சதிகா
செல்வி சு.லுஜிதா

ஓவியங்கள் :
செல்வன் த. யோகதாஸ்
செல்வன் ந. நிதூசன்
செல்வன் அனோஜன்
செல்வன் ஆனந்தருபன்
செல்வன் அ. லக்ஷன்
செல்வி அ. அனோஜினி
செல்வி மு. சினோசி
செல்வன் ரதீஸ்
செல்வன் நிரோஜன்
செல்வன் ஆர். மிலோசன்
செல்வன் ப. சாய்குமார்
செல்வன் ருசியந்தன்
செல்வன் அ. துஸ்மிகன்

வடிவமைப்பு : தனூட்

வெளியீடு : மாணவர் மன்றம்,
காலையடி மறுமலர்ச்சி மன்றம்,
காலையடி, பண்டத்தரிப்பு,
யாழ்ப்பாணம், இலங்கை.

## மறுமலர்ச்சி மன்றத்தின் மகத்தான காலம்

புதிய காலைக்கதிரின் நான்காவது இதழ் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் அளவில் வெளிவந்த பின்னர் ஐந்தாவ -து இதழான இவ் இதழ் சரியாக ஒன்பது மாதங்களின் பின்னர் வெளிவ -ருகின்றது. இந் நீண்ட கால இடைவெ -ளியில் மறுமலர்ச்சி மன்றத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படத் தக்கதான நிகழ்வுகள் நடந்தேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முக்கியமாக யூன் மதம் மறுமலர் -ச்சி மன்றத்தின் முன் பகுதியில் இடம் மாற்றி அமைக்கப்பட்ட கந்த சுவாமி ஆலயத்தின் கும்பாபிசேகம் மிகவும் விமரிசையாக இடம்பெற்றது.

அடுத்து யூலை மாதம் 27 ஆம் திகதி அன்று மறுமலர்ச்சி மன்றத்தில் புதிதாக தியாகராசா மகேஸ்வரன் குடும்பத்தினரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட உள்ளக கலை அரங்கமும், விசு க. விமலன் (சங்கர்) ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட சர்வதேச தரம்வாய்ந்த பாலர் பாடசாலையும், கந்தையா தம்பையா (தம்பையா வாத்தியார்) அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நீர்த் தாங்கி, கழஞ்சிய அறை என்பனவும், சிறுவர் விளையாட்டுத் திடலும், மைதானமும், திறந்த வெளி அரங்கும் உள்ளடங்கிய பன்முக கட்டுமானத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

இவை யாவும் இக்கிராமத்தின் மாணவர்களான எமக்குக் கிடைத்த பெருங் கொடைகளே ஆகும்.



விலை : ரூபா 20/-

இத்தகையதொரு பன்முக கட்டுமானத் தொகுதியை உடைய கிராமத்தில் நாங்கள் வாழ்கின்றோம் என்பது எமக்கெல்லாம் பெருமையைக் கொடுக்கின்றது. இவ் அரும் பணிக்காகப் பாடுபட்ட மன்றத்தின் ஸ்தாபகர்கள், மூத்த உறுப்பினர்கள், ஒத்துழைப்பு வழங்கிய புலம்பெயர் உறவினர்கள் அனைவருக்கும் நாம் என்றென்றும் நன்றிக்கடன்பட்டுள்ளோம்.

மாணவர்களிடமிருந்து எழுத்துக்கள் மிகவும் குறைவாகக் கிடைப்பதுடன், ஓவியங்களே மிகவும் அதிகமாகக் கிடைக்கின்றமையால், இனி வரும் காலங்களில் எழுத்தார்வமுள்ள மாணவர்கள் அதிகமாக ஆக்கங்களை வழங்குவதன்மூலம் புதிய காலைக்கதிர் சஞ்சிகை இன்னும் சிறப்பாகத் தொடர்ந்து வெளிவர உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.


*****

# ரோசாப் பூ




செல்வி சு. நிதர்சிகா. தரம் 9.

சின்ன சின்ன றோசாப் பூ
சிவந்த நல்ல றோசாப் பூ
என்னைப் பார்த்துச் சிரிக்கின்ற
எங்கள் வீட்டு ரோசாப் பூ



வண்ண வண்ண றோசாப் பூ
வடிவான றோசாப் பூ
மனதைக் கவர்ந்த றோசாப் பூ
மணம் வீசும் றோசாப் பூ



நல்ல நல்ல றோசாப் பூ
நான் விரும்பும் றோசாப் பூ
வண்டு மொய்க்கும் றோசாப் பூ
வாடி வதங்கும் றோசாப் பூ

# தாய் என்னும் பந்தம்


செல்வி சிந்துஜா நேசராசா. க.பொ.த (உ.த.)

காலை கதிரவன் மேலே வந்துகொண்டிருந்தான், கடிகாரம் 7.30 ஐக் காட்டியது. சுமையலறை வேலைகளை முடித்துக் கொண்டு அலுவலகத்துக்குச் செல்லத் தயாரானாள் ராதா. அவளுக்காக அலுவலகக் கார் வீட்டுவாசலில் காத்திருந்தது. வீட்டு வேலைகளை விரைவாக முடித்த கையோடு வெளியே வந்து வண்டிக்குள் அமர்ந்தவளை "குட் மோர்னிங் மெடம்" என்னும் சாரதியின் மகிழ்வான குரல் வரவேற்க, பதிலுக்கு "வெரி குட் மோர்னிங்" எனக் கூறி ஒரு புன்னகையை வீசினாள்.

அவளுடைய வருகைக்காக அவளது அலுவலகம் காத்திருந்தது. அவள் அலுவலகத்திற்குள் நுளையு-ம்போது அனைவரும் எழுந்து நின்று தமது மரியாதையை வெளிப்படுத்தினார்கள்.

அனைவருக்கும் தனது வணக்கத்தைத் தெரிவித்தவாறு, தனக்குரிய அறைக்குள் சென்றாள். அங்கே, இறை வழிபாட்டை முடித்துவிட்டு, தனது இருக்கையில் அமர்ந்துகொண்டு கடமைகளைக் கவனிக்கத்தொடங்கினாள்.

பகல் 12 மணி. மதிய உணவு இடைவேளை நேரம் ஆகையால் அருகில் இருந்த அன்றைய பத்திரிகையைக் கைகளினால் புரட்டினாள். ஒரு கணம் அவளது விழிகள் பத்திரிகையின் ஒரு பக்கத்தில் லயித்து நின்றன. "தாயின் மடியில்" எனும் தலைப்பில் ஒரு கவிஞன் தன் அன்னையை உருவகித்து கவிதை ஒன்று படைத்திருந்தான். அந்தக் கவி வரிகளை அவளது உதடுகள் உச்சரிக்கும்போது, அவளது விழிகளில் இருந்து விழுந்த கண்ணீர்த் துளிகள் பத்திரிகையை நனைத்துவிட்டன. நேரம் விரைவாக நகர்ந்தது, மணி



4 ஐக் காட்டியது. ஆம் அவளுக் - காக அங்கே பலர் காத்திருப்பர். தனது கடமைகளை முடித்து, காத்திருந்தவர்களுக்காகப் புறப்பட -த் தொடங்கினாள். ஆனாலும் என்னவோ, அவளுடைய உள்ளம் மட்டும் அந்தக் கவி வரிகளை மீண்டும் மீண்டும் உச்சரித்துக் - கொண்டிருந்தன. ஆவை அவளது கடந்த காலத்தை நினைவு - படுத்தியது.

ராதாவுக்கு 10 வயதான - போது அவளது தந்தையை வாகன விபத்தில் காலன் அழைத்துச் சென்றுவிட்டான். அவர் ஒரு கூலித்தொழிலாளி என்றாலும், ராதாவையும் அவளுடைய தம்பி கண்ணனையும் ஒரு உத்தியோகம் பார்க்கப் பண்ணவேணும் என்று ஆசை. தன்னுடைய சக்திக்கு மேலாகவே உழைத்து அவருடைய கனவை நனவாக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். ஏழைகளின் கண்ணில் ஆனந்தத்தைப் பார்க்க காலன் வழிவிடுவதில்லை என்பது -போல் அவரை அழைத்துச் சென்றுவிட்டான். ராதாவால் தந்தையின் இழப்பை விரைவில் மறக்க முடியவில்லை. கணவனின் மறைவு சாந்தியைப் பாதித்தாலும் அவளுக்குத் தனது கடமைகளில் தெளிவிருந்தது. தனது கணவனின் கனவை நனவாக்குவதே தன் இலட்சியம் என வாழத்தொடங் - கினாள். தன் பிள்ளைகளின் பசிபோக்க வயல்களிலும்,



வீடுகளிலும் கூலி வேலைக்குச் செல்லத் தொடங்கினாள். கணவனின் பாசத்தினால் வீட்டுக்குள் கட்டுண்டு கிடந்த சாந்தாவிற்கு, ஆரம்பத்தில் சற்று கடினமாக இருந்தாலும், தன் பிள்ளைகளுக்காக அனைத்தையும் தாங்கிக்கொண்டாள் அந்தத் தாய்.

“என் நீ உப்பிடிக் கஸ்ரப்படு - கிறாய்? உதுகளைக் கொண்டே அநாத ஆச்சிரமம் வழிய தள்ளிவிடன். இல்லா, உன்னோட இஞ்ச வேலைக்கு கூட்டியாவன். படிச்சு என்னத்த கிளிக்கப் போகுதுகள்?” எனத் தனது எசமானி பல தடவைகள் கூறியும், தன்னுடைய மனதை ஆறுதல்படுத் -தியவாறு, “நாங்க நாலு எழுத்துப் படிக்காததாலதான் இப்பிடிக் கஸ்ரப்படுறோம், அதுகளும் ஏன் கஸ்ரப்படுவான்? அதுகளாச்சும் நல்லா இருக்கட்டும்.” எனக் கூறியவாறு பாத்திரங்களை மினுக்குவாள்.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றோடியது. ராதாவும் பருவ மங்கை ஆனாள். தந்தையின் கனவும், தன் தாய் படும் வேதனை -களும் அவளது இலட்சியப் பாதையை மிகவும் நேர்த்தியாகச் செப்பனிட்டுக் கொண்டிருந்தன. அதுபோலத்தான் கண்ணனும். ராதா உயர்தரப் பரீட்சை எழுதி அவளது கடின உழைப்பின் பயனாக மாவட்டத்தில் முதல்நிலை மாணவியாகத் தேர்ச்சியடைந்தாள். அதைக் கேட்டபோது சாந்தாவின் மனதில் ஏற்பட்ட மகிழ்வு அதுவரை அவள் பட்ட துன்பங்களை எல்லாம் தவிடுபொடியாக்கியது.

பல சவால்களைக் கடந்து பல்கலைக்கழகப் படிப்பை முதல் தர சித்தியுடன் முடித்தாள் ராதா. பட்டதாரியாக வேலைக்காக அவள் காத்திருந்த வேளையில் யார் கண்பட்டதோ? சாந்தாவைத் திடீர் என நோய் பற்றிக் கொண்டது. வைத்தியசாலையில் காட்டியபோது "அம்மா இது காலம் கடந்து விட்டது, அவா அவாவினுடைய சக்திக்கு மேலாகக் கஸ்ரப்பட்டு இருக்கிறா. தன்னுடைய நோய் பற்றி ஏற்கனவே தெரிந்திருந்தும் கவனம் எடுக்காமல் விட்டுவிட்டா. இனி எங்களால எதுவுமே செய்ய முடியாது. இறைவனைத்தான் பிரார்த்தனை செய்யுங்கோ." என மருத்துவர்கள் கையை விரித்து விட்டனர். இதுவரை காலமும் தன் இரு பிள்ளைகளின் வாழ்க்கையை இன்பமாக்க எத்தனையோ துன்பங் -களையும் துயரங்களையும் எதிர் கொண்ட அந்தச் சுயநலமற்ற தாயின் இதயம் முதன் முறையாக ஓய்வை நிரந்தரமாய் எடுக்கத் தயாரானது. ராதாவும் கண்ணனும் எத்தனை முயன்றும் காலனை வெல்ல முடியவில்லை. எத்தனை -யோ கஸ்ரங்களை எதிர்கொண்ட அந்த வீரத்தாய் காலனையும் எதிர்கொண்டு காலத்துள் கரைந் -தாள். ராதாவால் அந்தத் துயரத்தில் இருந்து மீளவே முடியவில்லை.

அவள் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியெய்தி உயர் பதவியை அடைந்தபோதும், தான் உழைத்து தாய்க்கு ஒரு வாய் சாப்பாடு போட முடிய -வில்லையே என்ற கவலை எப்பொழுதும் அவளை வாட்டியது. மிக விரைவிலேயே அவளுக்குப் பிரதேச செயலாளராகப் பதவி உயர்வு கிடைத்தது. நியமனக் கடிதத்தை தாயின் படத்தின் முன் வைத்தாள். கருணை சிந்திய தாயின் முகம் "நான் உன்னுடன் -தான் இருக்கிறேன். கவலைப் -படாதே எல்லாம் நல்லதாகவே நடக்கும்." என அவளைப் பார்த்துக் கூறுவதுபோல இருந்தது. வறுமையின் வலியை முழுமையாக உணர்ந்தவள் என்பதால், தன்னால் முடிந்தவரை பல ஏழைக் குடும்பங்களின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டாள்.

கண்ணன் உயர்கல்விக்காகப் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்றான்.

குடிசை வீட்டில் மழையிலும் வெயிலிலும் தன் தாயுடன் வாழ்ந்த வாழ்வை விட இன்று உள்ள குளிரூட்டப்பட்ட பங்களா வாழ்க்கை பெரிதாகத் தெரியவில்லை. அவளுக்குத் தன் அன்னையுடன் காலில் செருப்பில்லாது வயல் வெளிகளில் வேலைக்குச் செல்லும்போது இருந்த ஆனந்தம் இன்று சொகுசு வாகனத்தில் செல்லும்போது ஏற்படவில்லை. இரவு இரவாகப் படிக்கும்போது, தான் வேலைக்குப் போய்வந்த களைப்புடனும் அவளுக்காக வழித்திருந்து தேனீர் கோடுத்த அந்த அன்பை இப்போது இழந்து அனாதையாகிவிட்டாள்.

கடந்த கால நினைவுகள் நிறைந்து கண்களின் ஓரத்தால் கண்ணீராகக் கசிய முற்பட்டபோது, "மேடம்! மேடம்!" என்ற ஒலி அவளை நிகழ்காலத்திற்குக் கொண்டுவந்தது. முதியோர் இல்லத்தின் வாயிலில் வந்து நின்ற பிக்கப்பின் கதவு திறக்கப்பட்டது. தன் தாய்க்கு அளிக்கமுடியாத சந்தோசத்தை இன்று தமது பிள்ளைகளால் வஞ்சிக்கப்பட்ட பல தாய்மாருக்கு அவள் வழங்குகின்றாள். இது அவளுக்குப் பெரும் மன ஆறுதலை அளித்தது.

★★★★★

# கல்வி

செல்வி மு. சினோசி




வீட்டை முதுகில் சுமந்துமே
மெல்ல மெல்லச் சென்றிடும்
ஆமை போல நாமுமே
அடக்கம் கொள்ள வேண்டுமே!

சோம்பல் இன்றி என்றுமே
சுறுசுறுப்பாய் உழைத்திடும்
எறும்பை போல நாமுமே
ஏற்றம் காண வேண்டுமே!


தேடி நித்தம் பூக்களில்
தேன் சேர்க்கும் தேனீபோல்
தேர்ந்த நல்ல கல்வியை
தேடி நாமும் கற்போமே!



# மறுமலர்ச்சி மன்றத்தின் புதிய கந்தசுவாமி கோயில்



செல்வன் ந. யதுசன், தரம் 6.



காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கோயிலே கந்தசுவாமி கோயில் ஆகும். இது ஒரு முருகன் ஆலயம். இது முன்னர் வெற்றிமடம் என்று சொல்லப்பட்ட பழமையான கோயில் ஆகும். அது முன்னர் மன்ற மைதானத்தின் நடுவில் அமைந்திருந்தது. இக்கோயிலை திரு ஆறுமுகம் கந்தசாமி என்பவர் பராமரித்து வந்தார். பின்னர் அவர் இச்சொத்தை மறுமலர்ச்சி மன்றத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். அவரது ஞாபகார்த்தமாகவே இப்போது புதிதாக மன்றத்தின் முன்பக்கத்தில் கட்டப்பட்டிருக்கும் கோவிலுக்குக் கந்தசுவாமி கோயில் எனப் பெயரிடப்பட்டுள்ளது. அத்துடன் அவருக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மன்ற நூல் நிலையத்திற்கும் அவரது பெயரே வைக்கப்பட்டிருக்கின்றது.

இப் புதிய கோயில் மிகவும் அழகானதாக உள்ளது. இக் கோயிலைச் சுற்றி பிள்ளையார், லஷ்மி, வைரவர் ஆகிய கடவுள்களுக்குச் சிறிய கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. மணிக் கோபுரமும் அதில் வீதியால் செல்பவர்களின் வசதிக்காக இரண்டு பக்கங்களில் இருந்தும் பார்க்கக்கூடிய மணிக்கூடும் வைக்கப்பட்டுள்ளது. வீண் ஆடம்பரங்கள் இல்லாமல் எளிமையாக அமைக்கப்பட்டுள்ள இக்கோயிலில் இறைவன் விரும்பி வந்து வீற்றிருப்பான் எனப் பெரியோர் கூறுகின்றனர்.

★★★★★

# வெற்றி நிச்சயம் !

செல்வி ஈ.யஸ்வினி, தரம் 10.



பள்ளி செல்லும் சிறுவனே
நீ கருத்தாய் கல்வி கற்றிடு
ஆசான் சொல்லை மதித்திடு
ஆனைவரின் அன்பையும் பெற்றிடு




மூத்தோரை கனம் பண்ணிடு
சிறியோரை அன்பாய் நடத்திடு
ஒற்றுமையே பலம் என வாழ்ந்திடு
ஒன்றாய்க் கூடி விளையாடிடு




வீதி விதிகளைப் பேணிடு
முதியோருக்கு உதவி செய்திடு
பெற்றோர் சொற்படி நடந்திடு
நற்பிரஜையாக வாழ்ந்திடு

ஊக்கமுடன் கல்வி கற்றிடு
உலகில் உயர்நிலை அடைந்திடுவாய்
கல்வியை கவனத்துடன் கற்றிட்டால்
நீ வெற்றி காண்பது நிச்சயமே!



★★★★★

# மாற்றுவலுவுடையோர்

செல்வி யோ. கஜாந்தினி. தரம் 09.



"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, அதனிலும் அரிது கூன் குருடு நீங்கிப் பிறத்தல்." என்று ஔவையார் கூறுகின்றார். ஆனாலும், அவ்வாறு அரிய வாய்ப்பைப் பெறாத மாற்றுவலுவுடையோர் பலர் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக் - கின்றார்கள்.

இவ்வாறான நிலை ஏற்படுவ -தற்கு பிரதானமாக மூன்று காரணங்கள் உள்ளன. ஆவையா - வன, விபத்துக்கள், யுத்தம் அல்லது மோதல் மற்றும் பிறப்புசார் குறைபாடு அல்லது நோய்கள் ஆகும். இவற்றுக்குப் பெரும்பாலும் மனிதச் செயற்பாடுகளே காரணங்க - ளாக அமைகின்றன.

விபத்துக்கள் ஏற்பட முக்கிய காரணங்களாவன, வீதியில் பயணிக் -கும்போது சரியான வீதி விதிகளைப் பின்பற்றி நடக்காமை, வாகனங்களைச் செலுத்தும்போது தொலைபேசி பயன்படுத்துதல், பாதசாரிகள் வீதியை மஞ்சள் கோட்டினூடாகக் கடக்காமை, நடந்து செல்வோர் வலது பக்கமாக நடக்காமை, மோட்டார் சைக்கிளில் செல்லும்போது தலைக்கவசம் அணியாமை போன்றன வீதி விபத்துக்கள் ஏற்படக் காரணமா - கின்றன. ஏனைய விபத்துக்கள் இடம்பெற கவனக் குறைவு, முன்னே -ற்பாடின்மை போன்றன காரணமாகி -ன்றன. ஆவை எமது உடல் உறுப்புக்களை இழக்கும் நிலையை ஏற்படுத்துகின்றன. இதனால் மாற்றுவ -லுவுடையோராய் மாறும் நிலை ஏற்படுகின்றது. அது எமது வாழ்வைச் சந்தோசமாக வாழ முடியாமல் செய்துவிடுகின்றது. ஆகவே நாம் விபத்துக்களை முடிந்தளவு குறைக்க முயல வேண்டும்.

அடுத்து யுத்தம், மோதல்கள் என்பனவற்றின் காரணமாகவே பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அது உடல் உறுப்புக்களின் இழப்பை






மாத்திரமன்றி மரணங்களைக் கூட ஏற்படுத்துகின்றது. மோதல்கள் சாதி, மத, இனப் பிரச்சினைகளாலும், தனிப்பட்ட காரணங்களாலும் ஏற்படுகின்றது. ஆகவே, நாம் சாதி, மத, இன பேதங்களின்றி சந்தோசமாக இருந்தால், மோதல்கள் குறைந்து நாம் பாதுகாப்பாக இருக்கமுடியும்.

இவ்வாறாக மாற்றுவலுவுடையோராக இருப்போரை ஊனமுற்றோர், அங்கவீனர்கள், விசேட தேவையுடையோர், மாற்றாற்றல் உடையோர் என்றும் பலவாறு குறிப்பிடுவர். இன்று மாற்றுவலுவுடையோரை ஊனமுற்றோர் அல்லது அங்கவீனர்கள் என்று குறிப்பிடுவதைத் தவிர்ப்பதைக் காணலாம். ஆவ்வாறு அழைக்காமை -க்கான காரணம் அவர்கள் உடம்பாலும் ஊனமுற்று, உளத்தா -லும் ஊனமுற்று விடக்கூடாது என்பதாலே ஆகும்.

இன்று இம் மாற்றுவலுவுடையோருக்கு தொழில்நுட்பம் பல உதவிகளைச் செய்கின்றது. அதாவது கண்தெரியாதவர்களுக்கு பிறெய்லர் எழுத்து முறையும், சத்தத்தின் மூலம் இயக்கக்கூடிய கணினிகளும், தொலைபேசிகளில் விசேட குறியீடுகள் தொட்டுணரக்கூடிய வகையில் இடம்பெற்றிருப்பதும், கட்டடங்கள், வீதிகளில் விசேட ஒலியெழுப்பக்கூடிய கற்கள் பதிக்கப்படுகின்றமையையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்வாறு பலவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம். எனவே, மாற்றுவலுவுடையோரும் சமமாக வழத்தக்க வகையில், அவர்களைக் காயப்படுத்தாத ஒரு சமுதாயமாக நாம் வழர்வதே இனிவரும் காலங்களில் மாற்றுத் திறனாளிகளான எமது உறவுகளுக்கு நாம் செய்யவேண்டிய முக்கிய கடமை ஆகும்.

★★★★★

# வாழ்க்கை

செல்வன் கு. தர்சன்

வாழ்க்கை நமதே
வாழப் பழகிக்கொள்வோம்.
சுற்றுகின்ற பூமி நம்
சொத்து என்பதை உணர்ந்திடுவோம்.

இன்பமான எமது வாழ்வை
இழிவான மது போதையிலும்
மனதை மயக்கும் புகைத்தலிலும்
இழந்தும் நாம் தவிப்பதேனோ?

நோயின்றி வாழ்தலே
குறைவில்லா இன்பம்
சூழலைப் பாதுகாத்துச்
சுத்தத்தைப் பேணிடுவோம்

குண நலன் கைக்கொண்டு
குற்றங்கள் குறைத்திடுவோம்
கனிவுடனே இவ்வுலகில்
கல்விமானாய் வளர்ந்திடுவோம்

சீர் மிகுந்த இப்புவியில்
சிறந்த நல்ல உழைப்பாளியாய் ~ நல்
சிந்தனை உடையவராய்
சிறப்புடனே வாழ்ந்திடலாம்.



# மனிதர் மாறவேண்டும் சிறு மழலைகள் வாழ்வுக்காக

செல்வி கஜானி ஆறுமுகசாமி, க.பொ.த (உ. த.)

"வைசு, வைசு இஞ்ச வா..."

"என்னம்மா?"

"உனக்குக் கூப்பிட்டது கேக்கேல்லையே? இஞ்ச கெதிப்பண்ணி வா..." என்று ஆக்ரோசமான குரலில் கத்தினாள் முதலாளியம்மா.

"இஞ்ச வந்து சட்டியை எடுத்து கழுவிப்போட்டு, இந்த வீட்டைத் துடைத்து வை. இண்டைக்கு என்ர மூத்த மேன் பிரான்சிலயிருந்து வாறான். அவன் வரேக்க வீட்டைப் பாத்த உடனே அசந்து போவேணும். ம் சீக்கிரம், வேகமாக வேலையைச் செய்" என்று கூறிக்கொண்டே வெளியே சென்றாள் முதலாளியம்மா. பாவம் வைசு அவள் ஒன்றும் பெரிய பெண் இல்லை. அவளுக்கு வெறும் பத்து வயதுதான் இப்போது நடக்கிறது. வைசு இந்த வீட்டுக்கு வந்தது அவளுடைய துர்அதிஸ்டம் என்றுதான் சொல்லவேண்டும். அவளுடைய சுதந்திரமும், எதிர்காலமும் சீரழிந்து போனதுதான் மிச்சம்.

வைசு அவளது தாயின் வயிற்றில் இருந்தபோது, ஆலயப் பூசகராக இருந்த அவளது தந்தை தனது குலத்தொழிலைத் தொடர்வதற்கு ஓர் ஆண்வாரிசு கிடைத்துவிட்டதாகப் பூரித்துப் போயிருந்தார். அவளுடைய பாட்டி தனக்குப் பேரப்பிள்ளை பிறக்கப்போகுது என்று பெரும் ஆரவாரப்பட்டாள். அவளிடத்தில் சமய நம்பிக்கையும், மூடநம்பிக்கையும் அதிகளவில் காணப்பட்டாலும் இரக்க குணமும் கொஞ்சம் இருந்தது. எந்த நாளும் சோதிடம் பார்ப்பது, சகுனம் பார்த்து நடப்பது என்று வாழ்க்கையை நடத்தி வந்தார். எப்போது நித்திரைவிட்டுக் காலையில் எழும்பும்போதும் "அப்பனே பரமசிவனே" என்று கூறிக்கொண்டுதான் எழுவார். எதிரிலே யாராவது நின்றுவிட்டால் அவ்வளவுதான், "மகராசியின்ர முழுவியளம் இன்றைக்கு என்ன நடக்கப்போகுதோ?" என்று நச்சரித்துக்கொண்டே எழுவார். இத்தகைய ஒரு குடும்பத்தில்தான் வைசு பிறந்தாள். ஆனால், பின்னர் அது வேறமாதிரியாக மாறிவிட்டது.

பிரசவ வலியேற்பட்டு, யாழ்ப்பாண பெரிய ஆஸ்பத்திரியில் லட்சுமி சேர்க்கப்பட்டாள். பிரசவத் -துக்கான ஏற்பாடுகளை வைத்திய -ர்கள் செய்தபோது, “இண்டைக்குப் பிரசவம் பாக்க வேண்டாம். ஏதேனும் ஊசி போட்டெண்டாலும் குழந்தையை நாளைக்குப் பிறக்கப் பண்ணுங்கோ” என்று வைத்தியர்க -ளின் காலைப் பிடிக்காத குறையாகக் கெஞ்சினாள் பாட்டி. “என்னம்மா நீங்களும் ஒரு பொம்பிளைதானே? பிரசவ வலியில துடிக்கிற தாய்க்குப் பிரசவம் பார்க்க வேண்டாம் என்றியள், இண்டைக்குப் பிந்தினால் குழந்தை -க்கும் தாய்க்கும் ஆபத்தாய் போகும்.” என்று பாட்டியை அறிவுறுத்திய பிரதம மருத்துவர் அன்றே லட்சுமியின் பிரசவத்துக் -கான ஏற்பாடுகளைச் செய்யக் கட்டளையிட்டார். பாவம் லட்சுமி தான் பெற்றெடுத்த பிள்ளைக்கு உலகத்தைக் காட்டிவிட்டு, தன்னு -டைய உலக வாழ்வை முடித்துக்கொண்டாள். வைத்தியர்க -ளின் கடின முயற்சியும் வீணானது.

“ஐயொ! படுபாவிப் பிள்ளை பிறந்தநேரம் தன்ர தாயைக் கொண்டுபோட்டாளே. இண்டைக்கு நாள் நல்லாயில்லையெண்டு அப்பவும் சொன்னேனே.” என்று புலம்பிய பாட்டி, “இந்தப் பிள்ளை பிறந்ததாலை எங்களுக்கு இன்னும் என்னென்ன கேடெல்லாம்




வரப்போகுதோ? அப்பனே ஈஸ்வரா நீதான் காவாந்து பண்ண வேணும்” என்று குழந்தையைப் பேசிக்கொ -ண்டு தனது ஆக்ரோசத்தை வெளிக்காட்டிக்கொண்டாள்.

தாயின் அன்பைப் பெறாமலே வளர்ந்த வைசு, பாட்டியால் மிகவும் சமயாசாரப்படி ஒழுக்கமும், பணிவும் மிக்கவளாக வளர்க்கப்பட்டாள். பெண் குழந்தை -யால் தந்தை கொஞ்சம் ஏமாற்றம் அடைந்து இருந்தாலும், அவள் பிறந்த பலன் அவருக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பெரிய கோயிலில் பூசகராகப் பணியாற்றும் வாய்ப்பு அவரைத் தேடிவந்தது. ஆனால், வைசுவின் குழந்தைத் தனமான குறும்புகளு -க்கு பாட்டி ஏதாவது சொல்லிக்கொ -ண்டே இருப்பாள். “அமாவசையில் -தானே நீ பிறந்தனி, பிறந்த உடனையே வீடு சகுனம் பிடிச்சமாதிரிப் போட்டுது. இன்னும் எத்தினை அழிவுகளைச் செய்யப் -போகுதோ?” என்று பிஞ்சு

உள்ளத்தை நோகடித்துக்கொண்டே இருந்தாள். வேகமாக வளர்ந்த அந்தப் பிஞ்சு மனதில் இந்த மூடநம்பிக்கை விசக் கருத்துக்கள் பெரும் விசனத்தை ஏற்படுத்தின.

அமாவாசையில் பிறந்திருந்தா -லும் பூரண நிலவாக ஒளிர்ந்த கள்ளம் கபடமில்லாத, லக்ஷ்மி கடாட்சம் நிறைந்த அவள் இரக்க குணமும், இளகிய மனமும் உடையவளாக வளர்ந்தாள். எட்டு வயதுச் சிறுமியான வைசு ஒருநாள் தந்தை ஆலயத்திற்குக் கொண்டு செல்வதற்காக அபிசேகத்திற்கான பாலை வாங்கிக்கொண்டு வழியில் வரும்போது முதியவர் ஒருவர் பசியாலும், தாகத்தாலும் மயங்கி விழுந்ததைப் பார்த்து தன் கையில் இருந்த பாலை அவருக்குப் பருகக்கொடுத்து, அவரை ஆசுவாசப் -படுத்திய பின்னரே வீட்டிற்கு வந்தாள். இதைக் கண்ட வீதியால் சென்ற ஒருவர், வைசுவின் வீட்டில் விசயத்தைப் பற்றவைத்துவிட்டார். வெறும் பாத்திரத்துடன் தாமதமாக வீட்டுக்கு வந்த வைசுவிற்கு, தாழ்த்த -ப்பட்ட சாதியைச் சேர்ந்தவருக்கு அபிசேகப் பாலை வழங்கியமை, பாத்திரத்தைத் தொடவிட்டு அசுத்தப் -படுத்தியமை, மற்றும் பால் கொண்டுவராமல் அபிசேகத்திற்கு இடையூறு விளைவித்தமை போன்ற காரணங்களுக்காக நாட்கணக்கில் சித்திரவதை இடம்பெற்றது. இதனால் சுக்குநூறாய் உடைந்த அந்தப் பிஞ்சு மனம் வீட்டை விட்டு வெளியேறி அனாதையாகத் தெரு - வில் அலையும் நிலையைத் தோற்றுவித்தது.

தெருவில் பசியினால் ஏங்கி -யபடி நின்ற வைசுவைக் கண்ட இந்த முதலாளியம்மாவின் கணவர், தன்னுடைய வீட்டுக்கு அழைத்து வந்து உணவழித்து ஆதரவு தந்தார். எதிர்காலம் தனக்கு சவாலாக அமையாது என நினைத்து புதிய வாழ்விற்குள் காலடி எடுத்து வைத்த வைசுவிற்கு புதிய இடத்திலும் மிஞ்சியது ஏக்கமும், ஏமாற்றமும்தான். படிப்பிற் -காக விழிக்க வேண்டிய கண்கள், அடுப்பை ஊதி ஊதிச் சிவந்தன. பென்சில் பிடிக்கவேண்டிய கரங்கள் வீட்டு வேலைகளால் விறைத்துப் போயின. வாழ்வே ரணமாகி, துடுப்பற்ற ஓடமாக வைசு என்ற அந்தப் பிஞ்சின் எதிர்காலம் கேள்விக்குறியாய் நீண்டுபோனது.










WEL COM










# காலைச் சிறாரின் கைவண்ணம்




































WEL COME




நத்தார்
வாழ்த்து
மடல்





# ஒரு தமிழனாய்...!

செல்வி சி. விதுர்சுஷா



செம்மொழியாம் தமிழ்மொழி
செதுக்கியதோர் பொன்மொழி
செம்மைக்கு இலக்கணமாய்
தொன்மைக்குச் சான்றாய்
தோன்றியதோர் தொன்மொழி

தமிழ்தனை உலகறியச் செய்ய
தோன்றினவே காப்பியங்கள்
தொல்காப்பியன் வகுத்தளித்த
வரையறைக்குள் திறம்படவே
திருக்குறள் என்ற பொய்யாமொழி
திருத்தியதே மக்களை
செலுத்தியதே நன்நெறியில்

எமைத் தாலாட்டியதும் தமிழ்தான்
எம்மைத் தாங்கி நிற்பதும் தமிழே
நம்மொழி தமிழ் ~ அதை
நலமுடன் பேணிடுவோம்
நாளும் அதன் புகழ்போற்றி
நானிலம் எங்கும் பரப்பிடுவோம்.

★★★★★

# கருங்குருவியின் உதவி

செல்வன் யா. சேயவன், தரம் 6.





கருங்குருவி ஒன்று அங்கும் இங்கும் இரைதேடி அலைந்தது. கடைசியில் களைப்பைப் போக்க ஆற்றங்கரைக்கு வந்தது. ஆற்று நீரை ஆசையாகப் பருகத் தொடங்கியது. அந்த நேரம் ஆற்று நீரில் பொத்தென்று ஏதோ விழுந்த சத்தம் கேட்டது. திடுக்கிட்ட கருங்குருவி சத்தம் வந்த திசையினை நோக்கியது. கருங்குருவி அத்திசையில் சிறிய தூக்கணாங் குருவியின் கூட்டைக் கண்டது. ஆற்றங்கரையில் இருந்த பெரிய மரத்தில் கூடு கட்டியிருந்த தூக்கணாங் குருவிக் கூடுகளில் ஒன்றே ஆற்று நீரில் விழுந்திருந்தது. ஆற்றோட்டத்தில் அடிபட்டுச் சென்றுகொண்டிருந்த கூட்டிற்கு அருகில் பறந்து சென்ற கருங்குருவி, கூட்டுக்குள் நான்கு குருவிக் குஞ்சுகள் கீச்…..! கீச்…….! என்று கத்தியவாறு அந்தரிப்பதைக் கண்டது. குஞ்சுகளின்மீது இரக்கப்பட்ட கருங்குருவி அக் கூட்டைத் தனது அலகினால் தூக்கிக் கொண்டு வந்து அந்தப் பெரிய மரக்கிளையில் இருந்த பொந்தொன்றிலே பாதுகாப்பாக வைத்தது. இரை தேடச் சென்றுவிட்டுத் திரும்பிவந்து தனது கூட்டையும், குஞ்சுகளையும் காணாது தவித்த தாய்த் தூக்கணாங்குருவி கருங்குருவிக்கு கண்ணீர்மல்க நன்றி சொல்லியது.

# அன்னை

செல்வி நே. சாருமதி. தரம் 06.



என்னைப் பெற்று வளர்த்த தாயே
ரத்தத்தைப் பாலாய்த்தந்து வளர்த் தாயே
10 மாதம் சுமந்து பெற்றெடுத் தாயே
பெரும் பாடுகள் பட்டெம்மைக் காத்திருந் தாயே

ஒளிதந்து மிளிரும் சூரியன் கூட
இரவினில் ஒளிமறைத்து உறங்கவைப்பான்
ஆனால் அன்னை நீயோ இருளிலும்
எமக்காய் உறக்கமின்றி உழைத் தாயே



கடவுளின் உருவான அன்னையே
நான் தினம் தொழுவேன் உன்னையே
பல கஸ்ரங்கள் பட்டு வளர்த்தாய் என்னையே
அதற்காக நான் தருவேன் கோடி பொன்னையே

---

**மாணவர்களின் ஆக்கங்களும் இச் சஞ்சிகை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.**

இப் “புதிய காலைக்கதிர்” சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக புலம்பெயர், எமது கிராமத்து மாணவர்களிடமிருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம் போன்ற பல்வேறு விதமான ஆக்கங்களையும் மாணவர் மன்றம் வேண்டிநிற்கின்றது. தங்களால் சுயமாக உருவாக்கப்பட்டதான ஆக்கங்களை தட்டச்சு செய்தோ கையெழுத்துப் பிரதியாகவோ வழங்க முடியும். ஓவியங்களை ஸ்கான் பண்ணி மென்பிரதியாகவும் அனுப்பிவைக்கலாம்.

உங்கள் ஆக்கங்களை அனுப்பவோ ஒப்படைக்கவோ வேண்டிய முகவரி :
மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு.

மின்னஞ்சல் முகவரி : saba.thanujan@gmail.com

# உண்மையான உறவுகளுக்காய்...

செல்வி சு.லுஜிதா. மன்/துட்சனாமருதமடு அ.மி.த.க பாடசாலை. (A/L) கலைப்பிரிவு 2015

நான்கு புறமும் காடுகளால் சூழப்பட்டு, பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று அழகான வயல் -களையும் குளம், ஆறு என்பவற்றை தன்னகத்தே கொண் -டும் விளங்கிய பசுமையான கிராமத்தில் இருந்ததே டிலோவினு -டைய அழகியவீடு, அவளுக்கு அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, தம்பியென்று மிகவும் அன்பான உறவுகள் இருந்தனர். அவர்கள் குடும்பத்தில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளையும் அமைதியாக தீர்த்துவைத்து, அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

டிலோவைப் பற்றிச் சொல் -லவேண்டுமெனில் மிகவும் அன்பா -னவள், இயற்கையை மிகவும் இரசிப்பவள், தன்னிலும் விட தனது அண்ணாவை மிகவும் விரும்புவள், விளையாட்டில் கவன -ம் செலுத்தாவிடினும் படிப்பில் அக்கறை கொண்டவள், தானும் தன் குடும்பமும் என்று வாழ்ந்தவ - ள். ஆம், டிலோ அப்போ க.பொ.த சாதாரணதரப் பரீட்சை எழுதி - விட்டுப் பெறுபேற்றுக்காக காத்திரு -ந்த காலம். அப்பொழுது அவள் கணணிக் கல்வி கற்றுக் கொண்டி -ருந்தாள். அந்தவேளை வந்தததுதா -ன் அவளுக்கு ஆபத்து. என்னவென்று சொல்வது? இவ் வயதில் பெரும்பாலோருக்கு உண் -டாகும் காதல் அவள் வாழ்விலும் குறுக்கிட்டது. எவ்வாறு உண்டான -தென்று கேட்கத் தோன்றுகிறதா? கூறுகிறேன் கேளுங்கள்.

டிலோ தனது அயல் கிராம உறவினரின் திருமணத்திற்காக தாய், தந்தை - யுடன் சென்றிருந்தாள். டிலோவிற்கு மூன்று நண்பர்கள் உண்டு. திருமண வீட்டில் ஓர் நண்பி நின்றிருந்தாள். அவள் டிலோவைப் பார்த்து "டிலோ, வா. உனக்கு என்னோட மச்சானைக் காட்டுறேன்" என்று கூற, டிலோ "இல்ல நான் வரேல்ல" என்று கூறவும். நண்பி கட்டாயப்படுத்தி தனது மச்சானை டிலோவிற்கு அறிமுகம் செய்து வைத்தாள். பாவம், அதுவரை அவள் அவனைக் கண்டது கூட இல்லை. ஆனால், அவன் அவளைத் தொடர்ச்சியாக பின்தொ -டர்கின்றான் என்பதையும், அவளது நண்பியான தனது உறவுக்காறப் பெண்ணைப் பயன்படுத்தித் தன் - னோடு அறிமுகமாவதற்காக அவன் செய்த நாடகமே, இச்சந்திப்பு என்பதையும் அவள் இறுதிவரை அறியவே இல்லை.

அன்று அவர்கள் வெறுமனே இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனரே தவிர பேசவில்லை. மறுநாட் காலை அவள் வீட்டின் அருகிலுள்ள கடையில் அவன் நின்றிருந்தான். அவளைக் கண்டவுடன் அவன் "உங்க வீடு இதுதானா? நான் வரலாமா?" என்று புன்னகையுடன் கேட்டதும், அவள் ஆமென்று தலையை ஆட்டிவிட்டு ஓடிவிட்--டாள். அவளுக்கும் அவன்மீது ஒரு ஈர்ப்பு இருந்ததை அப்போதுதான் அவள் உணர்ந்தாள். இதுதான் டிலோவினுடைய வாழ்வைப் புரட்--டப்போகும் நிகழ்வென்பதை--யோ தன்னால் தன் குடும்பம் அவமா--னத்தைப் பெறப்போகிறது என்பதை -யோ ஏன்? தனது உயிரையே பறிக்கப் போகின்றதென்பதையோ, அவள் அப்போது சிறிதும் அறிய--வில்லை. எதிர்காலம் பற்றி மனிதன் அறிந்திருந்தால் எந்த மனிதனும் தவறு செய்ய மாட்டான். மற்றும் யாருக்கும் துன்பம் நேராது. அவ்வாறான பண்பு கடவுளிடமே காணப்படும். ஆனால் டிலோ கடவுள் இல்லையே! அதனால் அவளுக்கு எதிர்காலம் பற்றித் தெரியாது போய்விட்டது.

டிலோ தனது சிறிய வயதிலிருந்தே தான் விரும்பும் பொருள் எதுவாயினும் அதைப்பெற முற்படுவாள். இலகுவில் தோல்வி--யை ஏற்றுவிடுபவள் அல்ல. ஆனால் தோல்வி ஏற்பட்டால் அதிலிருந்து இலகுவில் மீளமாட்--டாள். ஆகவே டிலோ தனது நண்பியிடமே அவனைப் பற்றி மெல்ல மெல்ல விசாரிக்கலானாள். தனது சிறிய தவறொன்றினால் டிலோவின் வாழ்வு தடம்புரளப் போவதை உணர்ந்த நண்பி, பல வழிகளிலும் இது தவறான தென்றும், அவன் பிழையான நோக்கத்தில் பழகுவதையும் உண -ர்த்த முயன்றாலும், காதல் கொண்ட அப் பேதையினது உள்ளம் அதை ஏற்கமறுத்தது. அவள் இதை ஏற்று ஒத்துழைக்க மறுத்த காரணத்தால் டிலோ தனது நண்பியினுடைய நட்பையும் இழந் -தாள். இதனால் அவள் வேதனை அடைந்தாலும், அதனை ஒருவாறு சமாளித்து தனது முயற்சியால் ஒருவாறாக அவனின் தொலைபேசி எண்ணைப் பேற்று, பதட்டத்துடன் ஆரம்பித்த அவளது பேச்சு சில நாட்களில் இருவரும் மிகவும் அன்பாகப் பேசுவதும், SMS அனுப்புவதுமாகத் தொடர்ந்தது.

தனது உயிரினும் மேலான அண்ணாவிடம் மட்டுமன்றி குடும்பத் -தினர் அனைவரிடமும் டிலோ தான் செய்யும் தவறுகளிலிருந்து தப்பிக்க பல்வேறு பொய்கள் கூறவேண்டி நேர்ந்தது. அவனோடு அவள் தனது சுகதுக்கங்களைப் பகிர்ந்தபோது அவனுடைய ஆறுதல் வார்த்தைகள் டிலோவினு -டைய மனதில் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவள் அவனை

மிகவும் நேசிக்க ஆரம்பித்தாள். அவனே தன் உலகம் என்றும் எண்ணலானாள். அச் சமயத்தில் அவள் தனிமையை விரும்பினாள். வீட்டில் ஏற்படும் சிற்சில பிரச்சனை -கள் அவளைப் பெரிதும் பாதிப்பதாக அமைந்தது. இதுவே டிலோவினுடைய வாழ்க்கைக்குப் பெரியதோர் திருப்புமுனையாக அமைந்தது.

இவள் அவனது இழுப்புக் -கெல்லாம் இசைய மறுத்ததால், அவன் இவளோடு நேரத்தைச் செலவு செய்வது வீண் எனக் கருதலானான். ஆதனால், அவள் காதல் ஐந்து மாதங்கள் மட்டுமே நிலைத்தது. காதலிப்பவர்கள் பிரிவ -து அண்மைக்காலங்களில் இடம்-- பெற்றுவருவதே. அதில் சிலர் சந்தோசமடைவர். ஆனால் உண்-- மையான காதலர் பெரும் இழப்பிற்கு உள்ளாவர். அதுபோல், டிலோ தனது உலகமே இருண்ட-- தாக உணர்ந்தாள். தான் எண்ணிய தனது உண்மையான உறவு தனைவிட்டுப் பிரிந்ததாக எண்ணி மனக் கலக்கமுற்றாள்.

அன்று பகல் இரவு முழுவதும் காளிகோயில் திருவிழா, எல்லோரும் சந்தோசமாக இருந்தா -லும் அவளால் அது முடியாமல் போகவே, அதிகாலை வீடு வந்து சேர்ந்தாள். களைப்பு மிகுதியால் வீட்டில் அயர்ந்து தூங்கிக்கொண்டி -ருந்தபொழுது அவளின் அக்கா-- வின் தொலைபேசிக்கு ஓர் அழைப்பு வந்தது. வீட்டில் அனைவரும் தோட்டத்திற்கு சென்றிருந்தனர். அழைத்தது தனது அண்ணா என்பதால் "ஹலோ அண்ணா, இங்க யாருமில்ல. எல்லோரும் தோட்டத்திற்குப் பொயிட்டாங்க" என்று கூற. அவளுடைய அண்ணா டிலோவின் பிரச்சினையை ஏற்கனவே அறிந்தி -ருந்ததால், அவளுக்கு "நீ என்னோட இனிமேல் பேசக்கூடாது" என்று கூறியதைக் கேட்ட அவள் தனது உயிர் அரைப்பங்கு பிரிந்ததாக உணர்ந்தாள். அன்றுதா -ன் அவள் மனதில் தான் உயிராக எண்ணிய இருவரும் தனை விட்டு விலகியதால் ஏற்படும் மன உளைச்சலை உணர்ந்தாள். இவ் வேதனை அவளை இவ்வுலகில் வாழவேணுமெனும் எண்ணத்தை முற்றாக மாற்றியதால், தனது வீட்டில் வயலுக்கு அடிப்பதற்காக வைத்திருந்த நச்சு போத்தலில் இருந்த மருந்தைக் குடித்தாள். பாவம் அவள், உண்மையென்று எண்ணிய அவள் உறவும் கிடைக்கவில்லை, சாவும் அவளை இலகுவில் கூட்டிச்செல்ல விரும்பவி -ல்லை. அவள் அப்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்-- டாள். கண் விழித்தபோது அவளு -டைய குடும்பத்தவர் கண்களில் நீர்வழிய நின்றிருந்தனர்.

அவளால் தொடர்ந்து அவனைக் காதலிக்க முடியாமல் போயிற்று. காரணம் அவன்

அவளை முழுமனதாக விரும்பாமையையும், தனது குடும்பம் தன்மேல் வைத்திருந்த அன்பும் மீண்டும் தவறு செய்யும் நோக்கை மாற்றியது. அதனால் டிலோ தனது காதலை முழுமையாக இல்லாவிடினும் மறக்க முயற்சி செய்தாள். இப்பொழுது வாழும் டிலோ தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு தன் குடும்ப மகிழ்ச்சியை எண்ணி வாழ்கிறாள். அவளால் மனதால் மகிழ்ந்து சிரிக்க முடியாவிட்டாலும் தனது குடும்பத்திற்காகச் சிரிக்கிறாள். அவளது உண்மையான தனது குடும்ப உறவுகளுக்காக.

"எமது வாழ்வில் எத்தனை புதுப்புது உறவுகள் வந்தாலும், எந்தவித எதிர்பார்ப்புமின்றி அன்பு செலுத்தும் உண்மையான உறவுகள் எமது குடும்பமே"

(பெயர்களே பொய்யானவை. சம்பவம் உண்மையானதே)

★★★

# கல்வி

செல்வி உசாலினி

காற்றில் பறப்பதல்ல கல்வி
காலத்தால் அழிவதில்லை கல்வி
களவு போவதல்ல கல்வி
கல்லடி படுவதல்ல கல்வி
அலைக்கு ஒதுங்குவதல்ல கல்வி
அடிக்கு அடங்குவதல்ல கல்வி
பணத்தால் வருவதல்ல கல்வி
படித்தால் வருவதே கல்வி



★★★

# மங்கையராய்...

செல்வி சி. தர்சனா



மதிகெட்ட உலகமதில்
மங்கையராய் பிறந்துவிட்டோம்
மானிட வர்க்கமதில்
மங்கையுமோர் அங்கமென
எண்ணாத மனிதருக்கு
உணர்த்திடுவோம் மங்கையவள்
பெருமைதனை

புவியையராய் பாவையராய்
எமையாத்த உலகினுக்கு
புதுமைப் பெண் நாமென்று
புதிய விதி சாத்திடுவோம்
மங்கையவள் ஆண்களுக்கு
அடிமையில்லை என்றுரைப்போம்




போகப் பொருளாக
இருந்த காலம் போகட்டும்
வேதனைகள் நாம் கடந்து
சாதனைகள் படைத்திடுவோம்
புவிவுலகம் புவித்திருக்க
புதுமகளாய் வீற்றிடுவோம்!

# கபிலின் கனவுகள்

செல்வி சி. விதுர்சா

இறைச்சி, மீன், முட்டை இவைகளெல்லாம் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. பார்த்த உடனேயே அனைத்தையும் உண்ண வேண்டும் என்ற எண்ணம் மேலோ--ங்கும் இந்தச் சுவையான உணவுக--ளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் இரு கண்கள். அந்தக் கண்களில் ஏதோ ஒரு சோகம். அதையும் தாண்டிய ஏக்கம் அவன் பெருமூச்சில் வெளிப்பட்டது. அந்த உணவகத்தின் முன்னால் நின்றுகொண்டிருந்த அந்தச் சிறுவ--னால் பசியை அடக்க முடியவி--ல்லை. நாவில் எச்சிலூறியது. பசி வேறு அவனை வாட்டி எடுத்தது. ஆனால், அச் சிறுவனிடமோ பணம் இருக்கவில்லை. அந்த உணவகத்--திற்கு வருவோர் போவோரை எல்லாம் ஏக்கத்துடனே பார்த்துக் கொண்டிருக்கின்றான். கல் நெஞ்சை -யும் கரைய வைக்கும் பார்வை அது. ஏனோ தெரியவில்லை கடந்து சென்றவர்களின் நெஞ்சு கல்லை விடக் கடினமானதாக இருந்தது.

அந்த உணவகத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த கபிலின் கண்ணில்பட்டது ஒரு முதியவர்தான். அந்த முதியவர் பல பொதிகளைச் சுமக்கமுடியாமல்



சுமந்தவாறு தாண்டித் தாண்டி நடந்துகொண்டு வந்தார். அந்த முதியவரிடம் சென்ற கபில்,

“ஐயா நீங்கள் இந்த முட்டைகளைத் தூக்கி கஸ்ரப்படுகிறீர்கள் போல”

“ஓம் தம்பி”

“அப்பிடியென்டால் நான் தூக்கித் தந்தால் எனக்கு சப்பாடு தருவீங்களோ” என்றான்.

கபிலின் கேள்விகள் ஒரு நிமிடம் பெரியவரை நிலை குலையச் செய்--தது. கனவுகளை சுமக்கவேண்டிய காலத்தில் கபில் பொதிகளை அல்லவா சுமக்கின்றான். என்று

கவலைப்பட்டுக் கொண்டார்.

"ஏனப்பா இப்பிடிக் கஸ்ரப்படு--கிறாய், நீ பள்ளிக்கூடம் போறேல் -லையோ?" என்றார் பெரியவர்.

"இருக்க வீடில்லை, சாப்பிடச் சாப்பாடில்லை. பிறகு என்னண்டு ஐயா படிப்பும் அதுக்கு ஒரு பள்ளிக்கூடமும்?" என்றான் கபில்.

இச்சிறுவயதில் இவனுக்கு ஏற்பட்ட விரக்தியை எண்ணி மனம் நொந்து கொண்டார் பெரியவர்.

"ஐயா என்னைப் பெத்த தாய் தந்தை நான் பிறந்து கொஞ்ச நாள்ளை என்னைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்காமல் பிரிஞ்சு ஆளுக்கு ஒவ்வொரு திசையிலை போயிட்டினம். என்னைப் பிறகு கொஞ்சக் காலம் சரியாக் கஸ்ரப்பட்டு வளத்த அம்மம்மா தன்னாலை முடியாமல் அருகில் இருந்த சேர்ச்சில் கொண்டுபோய் விட்டா. அங்க இருந்த பாதர்தான் என்னை வளர்த்தவர். பாதரிட்ட வளரும் மட்டும் பசி என்டால் என்னண்டு தெரியாம வளர்ந்தனான். என்ர காலம் என்னைப் பாதருடனும் வளர விடேல்லை. ரண்டு மாதத்துக்கு முன்னுக்கு பாதர் ஒரு விபத்தில்...." கபிலின் கண்கள் குளமானது, வார்த்தைகள் மௌனமாகின. இவ்வாறு கண்ணீரில் கரைந்த கபில் கடந்த காலத்தை கவலையாகச் சொல்லி முடித்தான்.

"இந்தளவு நாளும் பாதருக்காக அக்கம்பக்கத்தில் இருந்தாக்கள் சாப்பாடு தந்தவ. ஆனா இப்ப ஒருத்தரும் சாப்பாடு தர மாட்டினையாம்." என்றான். "எங்கட பாதர் ரொம்ப நல்லவர். என்னையும் ஒரு பாதராக்கிப் பார்க்க ஆசைப்பட்டவர்." என்றவன் கண்ணிலிருந்து வரும் நீரைத் துடைத்துக்கொண்டான்.

ஆமைதியாக அவனுடைய கதையைக் கேட்ட அந்தப் பெரியவர் பெருமூச்சொன்றை வெளிவிட்டவாறு, அவனை ஒரு உணவகத்திற்கு கூட்டிப் போய் அவனுக்கு சாப்பாடு வாங்கிக் கொடுத்தார். பின்னர் அவனைத் தன் வீட்டிற்கு கூட்டிப்போய் தனது பேரனின் உடைகளைக் கொடுத்து "கபில் பின்னேரம் இந்த உடுப்பைப் போட்டுக்கொண்டு வீட்ட வா" என்றார். பெரியவர் கொடுத்த உடைகளினை பவித்திரமாய் வாங்கிக்கொண்டு சேர்ச்சிற்கு சென்று உடைகளை மாற்றிக் கொண்டான். கர்த்தரிடம் தனக்கு உதவிய அந்தப் பெரியவரிற்காக ஜெபம் செய்தான். ஏதோ ஒரு எதிாபார்ப்பு. எதற்காகத் தன்னை அந்தப் பெரியவர் வரச் சொன்னார். இத்தனை எதிர்பார்பிற்கு மத்தியில் பெரியவரின் வீட்டை அடைகிறான் கபில்.

"கபில் வந்திட்டியா? நான்

உன்னோட கொஞ்சம் கதைக்கோ--ணும்"

"என்ன ஐயா"

"நான் உனக்கு ஒரு உதவி செய்யலாமென்று இருக்கிறன். உனக்குப் படிக்கவிருப்பமோ?"

"ஓம் ஐயா நான் நல்லாப் படிக்க வேணும். நிறையப் படிக்கவேணும். எங்கட பாதர் இன்ர ஆசையை நிறைவேற்ற நான் படிக்கவேணும். நான் படிச்சுப் பாதராய் வரவிரும்பிறன். என்னைப் போலவே இருந்து கஸ்ரப்படுற சிறுவர்களுக்கு உதவி செய்ய விரும்பிறன். மக்களை நல்வழியில் நடத்த விரும்பிறன்." என்றான்.

"உன்ர நல்ல எண்ணம் எனக்குப் பிடிச்சிருக்கு கபில். நான் உன்னை எனக்குத் தெரிந்த கருணை இல்லத்தில் சேர்த்து விடட்டோ?" இதைக்கேட்ட கபில் மிகவும் மகிழ்ச்சியுடன்

"ஓம் ஐயா" என்றான்.

தனக்கு தெரிந்த கருணை இல்லத்தில் கபிலைச் சேர்த்து விட்டார் பெரியவர். "உங்கள நான் மறக்க மாட்டன் ஐயா!" ஆள் மனதிலிருந்து வந்த நன்றி அது.

"நல்லாப் படி கபில்" என்றார் பெரியவர்.

கனவுகளைக் கண்ணிலே சுமந்த--வாறு கல்வியே கண்ணாக உழைக்கின்றான். குழந்தைகளை பெற்று விட்டு தெருவிலும் குப்பைத் தொட்டியிலும் வீசிச் செல்லும் தாய்மாருக்கும், பிள்ளைகளைப் பெற்றுவிட்டுப் பொறுப்பாக வளர்க்காத பெற்றோரிற்கும் ஒரு உயிரின் மகத்துவத்தையும், தாய்--மையின் மகத்துவத்தையும் புரிய வைக்க திடசங்கற்பம் பூண்டு கொண்டான். தான் பட்ட கஸ்ரங்--களை உலகில் எந்தக் குழந்தையும் படக்கூடாது என்று எண்ணினான். இத்தனையும் தான் ஒரு பாதரா வந்துதான் செய்யமுடியும் என எண்ணிக்கொண்டான். ஆயிரம் ஆசைகளை மனதில் வைத்தவாறே கல்வி கற்கத் தொடங்கினான் கபில். காலங்கள் கடந்து சென்றாலும் கபிலின் கனவுகள் நிச்சயம் பலிக்கும் என்ற நம்பிக்கையில்.

முற்றும்

(யாவும் கலப்படமற்ற கற்பனையே)




# புகை எல்லோர்க்கும் பகை

செல்வி வ. சதிகா




பணத்தைக் கொடுத்துப் பெரும் நோயை
விலைக்கு வாங்கும் விலை மதிப்பற்ற மானுடனே!
மாண்டுவிட்டதா உன் புத்தி ?
நுரையீரலைக் கரியாக்கி – உனது
உயிர் புசிக்கும் அரக்கனை நீ
புகைக்கும் முன் கொஞ்சம் யோசி.


smoker

இதய நோயும் சுவாச நோயும் பற்பல
நோய்கள் உன்னைச் சூழ்ந்து வதைத்து
இளவயதில் உன் உயிரை மாய்க்கிறதே
இன்னும் ஏன் அதை நீ உணர மறுக்கிறாய்

புகையால் ஆளமையை இழக்கிறாய் - உன்
ஆயுளையும் குறைக்கிறாய் - அது மட்டுமா
அடுத்தவன் நன் மதிப்பையும் இழக்கிறாய்
அட்டுழியங்களும் வகை வகையாய் புரிகின்றாய்

ஏழை மக்களின் வயிற்றில் அடித்து
அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை
ஏற்றுகின்ற அரசாங்கம் அரக்கத்தனமாய்
மனித உயிர்குடிக்கும் போதைப் பொருட்களை
ஏன் மலிவாகக் கிடைக்கச் செய்கின்றது?



உயிர்காக்கும் மருந்துகளுக்கே தட்டுப்பாடு
ஒரு மரத்தைத் தறிப்பதற்கும் கட்டுப்பாடு - ஆனால்
உயிர் குடிக்கும் மதுவிற்கு விளம்பரங்கள்
ஊடகங்கள் அனைத்திலும் பிரச்சாரங்கள்

எவருக்கும் அடிமையாகாமால் சுதந்திர வாழ்வு வாழ
எண்ணுகின்ற இளைஞனே நீ மதுவுக்கு அடிமையாகி
ஏமாந்து போவதேனோ? எதிர்கால தலைவனே!
புகைத்தலை எதிர்த்து நீயும் புற்றுநோயைத் தவிர்த்திடுவாய்.

# புதிய காலைக்கதிர் மலரின் சேவை தொடர

பு. சசீந்திரன், இளைஞர் சேவை உத்தியோகத்தர், மடு, மன்னார்.

புதிய காலைக்கதிர் இன்றைய மாணவ சமூகத்தின் அவசியமான காலத்தின் தேவையை உணர்ந்து வரும் புதமையான மலர். இது எமது மாணவச் செல்வங்களின் ஆக்கத்திறனை வளர்ப்பதற்கான புதிய பாதை. இம்மலர் கண்டு ஒரு தமிழனாக நான் பெருமிதம் கொள்கின்றேன். மாணவர்களுக்கு இது அரியதொரு வாய்ப்பாக அமைகின்றது. இவ் இதழின் மூலம் எமது மாணவச் சமூகம் படைப்பாக்கத்திறன் கொண்டவர்களாக பரிணமிப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அத்துடன் நூலின் வடிவமைப்பு மற்றும் தொகுப்பு என்பன சிறப்பாக அமைவது பாராட்டுக்குரியது. ஆசிரியர் குழுவினருக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன், மேலும், மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகளையும், தேடல் மிக்க ஆக்கங்களையும் ஊக்குவித்துப் பிரசுரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

# நண்பர்களுக்கு வாழ்த்துக்கள்


T. தக்சன், சுழிபுரம்.

தீமையை அழிப்போம் என்றும், நீதியை வெல்வோம் என்னும் உயர்வான எண்ணக்கருவைக் கொண்ட புதிய காலைக்கதிர் நண்பர்களுக்கு எனது இனிய வணக்கங்கள். ஒற்றுமையான உறவுகளாய் இருக்கின்ற நீங்கள் உங்கள் எதிர்பார்ப்புக்களை அடைய எத்தகைய எதிர்ப்புக்கள் வந்தாலும் எழுவீர் காலைச் சூரியனின் கதிரெனவே. உங்கள் பணி தொடர எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**பிறந்த நாளுக்கு என்ன அன்பளிப்பு வேண்டுமென்று நாட்டு மக்கள் கேட்டபோது, 'புத்தகங்கள்' என்று சற்றும் தாமதியாது தோழர் லெனின் கூறிவிட, குவிந்த புத்தகங்கள் பல இலட்சங்கள். அவை அனைத்தும் உலகிலேயே பெரிய நூலகமாக இன்று திகழ்கின்ற மொஸ்கோ லெனின் நூலகத்தில் உள்ளன.**



மும்பைக்கு விமானத்தில் போகாமல், காரில் போய் 3 நாட்களை விணாக்கியது ஏன்? என்ற வினாவுக்கு. பத்துப் புத்தகங்கள் படிக்க வேண்டி இருந்தது என்று பதிலளித்தாராம் அறிஞர் அண்ணா.



'என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள், இங்கே ஒரு புத்தகப் புழு உறங்குகின்றது. என்று' சொன்னாராம். பேட்ரன்ட் ரசல்.



'தனிமைச் சிறையில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டதற்கு, 'புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட்டு வருவேன்' என்றாராம் நேரு.





சக்திவாய்ந்த ஆயுதம் எது?
எனக் கேட்டபோது,
'புத்தகம்' என்றாராம்
மாட்டின் லூதர் கிங்.












R.Milan






English
8